[1979 ஏப்ரல் 11

புதுப்பாளையம் ஒன்றிய ஆசிரியர்களது ஊதியம்.

வினா எண் 686—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம் புதுப்பாளையம் ஒன்றியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1962-ல் இருந்து ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஆசிரியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது ?

(இ) என்ன காரணத்தினால் ?

(ஈ) அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ), (இ), (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

பழநி தாலூகாவில் உள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்.

*வினா எண். 687—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழநி தாலூகாவில் உள்ள எரமநாயக்கன்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, வத்தகவுண்டர்வலசு, சங்கஞ்செட்டிவலசு மற்றும் பல்வேறு கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அவ்வூர் மக்களுக்கு குடிநீர் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) ஒன்றியத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1979 ஏப்ரல் 11]

திரு. என். பழனிவேல் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழநி தாலூகாவில் உள்ள எரமநாயக்கன்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, வத்தகவுண்டர்வலசு, சங்கஞ்செட்டி வலசு மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள மக்கள், குறிப்பாக சங்கஞ்செட்டிவலசு போன்ற ஒதுக்குப்புறங்களில் உள்ள மக்கள் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் இல்லாமல் இன்றைய தினம் மிகவும் சிரமப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் ஒன்றியங்கள் எல்லாம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன என்று கூறினார்கள். அப்படி ஒன்றியங்கள் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே இதை உடனடியாக நீக்கி, நம்பர் 1 என்று சொல்லப்பட்டிருக்கிகிற ஊர்களுக்காவது இந்த ஆண்டு குடிதண்ணீர் வாரியத்தின் மூலம் தண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வத்திராயிருப்பு பேரூராட்சியினை நகராட்சியாக்கல்

*வினா எண். 688— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சியினை நகராட்சியாக மாற்றும் உத்தேசம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு பேரூராட்சி பயணிகள் அதிகமாகச் செல்லும் ஒரு சுற்றுலாத் தொகுதி. கீழக்கரையில் இருப்பதுபோன்ற அதே வருமானம் பேரூராட்சிக்கு வருகிறது. அங்கே விவசாயிகளின் விளைபொருள்களை எல்லாம் ஏற்றுமதி செய்கிறார்கள். அரசாங்க